**<u>நிகழும் சோபகிருது வருடம் ஆடி மாதம் 15ஆம் நாள் (31.07.2023)</u>**

**<u>திங்கட்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் நண்பகல் 12.45 மணிக்கு</u>**

**<u>நடைபெற்ற அவசர கூட்டப் பொருள்</u>**

**<u>பொருள் எண்.1 :</u>**

நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்களின் மே மற்றும் ஜீன் 2023ஆம் மாதங்களுக்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 501, பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 2 :</u>**

நாமக்கல் நகராட்சி பொறியாளர் அவர்களின் மே மற்றும் ஜீன் 2023ஆம் மாதங்களுக்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 502, பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 3 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 88 5230 எண்ணுள்ள வாகனத்தின் தகுதி சான்று பெற தேவையான மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினமாக ரூ.78,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4650/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 503, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4 :</u>**

நாமக்கல் நகராட்சி பொதுசுகாதர பிரிவில் இயங்கி வரும் JCB Robot வாகனத்தில் புதியதாக 4 டயர்கள் கொள்முதல் செய்யும் பணிகள் ரூ. 54,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி நாள். 10.07.2023 வழங்கப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 28.07.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. Sri Jeyam Tyres, நாமக்கல் – ரூ. 65,400/–
2. Salem Tyres, சேலம் – ரூ. 53,200/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த Salem Tyres, சேலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 3999/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 504, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் முதல்கட்ட சேகரம் செய்யும் பணிக்கு இலகு வாகனங்கள் LCV பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் திடக்கழிவுகளை மக்கும் கழிவுகள், உலர்கழிவுகள் என தனித்தனியாக சேகரம் செய்ய பயன்படுத்தப்படும் டப்பாக்கள் (Bins) பெரும்பாலனவை உடைந்தும், சேதமடைந்தும் பயன்படுத்த இயலாமல் உள்ளது. ஆகவே, கழிவுகளை முறையாக பிரித்து சேகரம் செய்யும் பணியில் தொய்வு ஏற்படுவதுடன், திடக்கழிவுகளை தனியாக சேகரம் செய்யும் பொழுது ஈரத்தினால் வாகனங்களின் தளம் சேதமாகி வாகனம் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளதால், அனைத்து வார்டுகளிலும் தற்போது புதியதாக 24 இலகு ரக வாங்க உள்ள வாகனங்களுக்கு பிளாஸ்டிக் டப்பாக்கள் (Plastic Bins) 80 லிட்டர் கொள்ளளவு கொண்டவை ஒரு வாகனத்திற்கு மூன்று ஊதா நிறம், மூன்று பச்சை நிறம் வீதம் பழைய வாகனங்களுக்கும் சேர்த்து 100 நீல நிற டப்பாக்களும், பச்சை நிற டப்பாக்கள் 100 எண்ணிக்கை டப்பாக்கள் தேவையாக உள்ளது.

எனவே, திடக்கழிவு மேலண்மை திட்டத்தின் கீழ் அவசர அவசியம் கருதி மேற்படியான 100 எண்ணிக்கை நீல நிற டப்பாக்களும், பச்சை நிற டப்பாக்கள் 100 எண்ணிக்கை புதியதாக வாங்குவதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.3,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி செலவுத் தொகை ரூ.3,00,000/–ஐ திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4713 /2023/எச்1)**

**தீர்மானம் எண் : 505, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 நடராஜபுரம் 2வது தெருவில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து சாலையில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலினை சீரமைக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.60இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3936 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 506, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 சேலம் சாலை உபசந்து –1இல் நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2022–2023இன்கீழ் சாலை புதுப்பிக்கப்படவுள்ளது. மேற்கண்ட பகுதியில் இருபுறம் பழுதடைந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகாலினை சீரமைத்து சாலை புதுப்பிக்கவேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.14.50இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3930 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 507, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8 :**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 88 4395 எண்ணுள்ள (COMPACTOR) வாகனத்தில் பம்ப்பு நாசில் பழுதடைந்து உள்ளதையும் மற்றும் மற்ற மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கும் ரூ. 2,50,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 419, நாள்: 30.06.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 26.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. காந்தி மோட்டார்ஸ், ஈரோடு – ரூ. 2,44,500/–
2. மேட்டுபாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் – ரூ. 2,49,600/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த காந்தி மோட்டார்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 3645 /2023/எச்1)**

**தீர்மானம் எண் : 508, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 செங்கழநீர் பிள்ளையார் கோவில் வடக்கு தெரு (சின்ன கடைவீதி) பகுதியில் அமைந்துள்ள பாதாள சாக்கடை ஆய்வு குழிகளை சாலை மட்டத்திற்கு உயர்த்துதல் பணி ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.405, நாள்.30.06.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. TamilNadu water supply
   and Drainage system, இராசிபுரம் – மதிப்பீட்டிற்கு 0.15 சதவீதம் குறைவு
2. JP Construction நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.25 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த TamilNadu water supply and Drainage system, இராசிபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 3407 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 509, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 10 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39 கொண்டிசெட்டிப்பட்டி பகுதி வேட்டைகவுண்டன்புதூர் சாலையில் பாதாள சாக்கடை அமைப்பு பராமரிப்பு பணி ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.458, நாள்.30.06.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. TamilNadu water supply and Drainage system, இராசிபுரம் – மதிப்பீட்டிற்கு 0.20 சதவீதம் குறைவு
2. JP Construction நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.40 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த TamilNadu water supply and Drainage system, இராசிபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 3940 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 510, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 11 :</u>

நாமக்கல் நகராட்சியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை அளவீடு செய்ய எடை இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் பணி ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.466, நாள்.30.06.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. Sri Athanur amman traders, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.20 சதவீதம் குறைவு
2. Mani Motors traders, மேட்டூர் – மதிப்பீட்டிற்கு 0.20 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த Sri Athanur amman traders, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 3933 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 511, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 12 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 நல்லிபாளையம் கமலம் எடைநிலையம் எதிரே உள்ள சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை பராமரிப்பு பணி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.462, நாள்.30.06.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு.பி.மாணிக்கம், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.10 சதவீதம் குறைவு
2. MPS Engineering Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.12 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.பி.மாணிக்கம், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 3938 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 512, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35 மோகனூர் சாலை உபசந்து–4 திருநகர் பகுதியில் பாதாள சாக்கடை ஆய்வுக்குழிகள் மற்றும் சிமெண்ட் சாலை பரமரிப்பு பணி ரூ.3.65 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.464, நாள்.30.06.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. TamilNadu water supply and Drainage system, இராசிபுரம் – மதிப்பீட்டிற்கு 0.10 சதவீதம் குறைவு
2. JP Construction நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.20 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த TamilNadu water supply and Drainage system, இராசிபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 3935 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 513, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 சிவஞானம் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் 7.5ஹச்.பி நீர்மூழ்கி மோட்டார் மற்றும் அதற்கான உதிரி பாகங்கள் பொருத்தும் பணி ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.457, நாள்.30.06.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு.கே.ஜி.சீனிவாசன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.10 சதவீதம் குறைவு
2. திரு. டி. இளங்கோவன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.20 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.கே.ஜி.சீனிவாசன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 3941 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 514, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான சேந்தமங்கலம் சாலையில் அமைந்துள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள கேஸ் குளோரினேசன் பிளான்ட் ஆண்டு பராமரிப்பு பணி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.447, நாள்.30.06.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. Athavan Traders, ஈரோடு – மதிப்பீட்டிற்கு 31.61 சதவீதம் அதிகம்
2. Senthilmurugan & Co, ஈரோடு – மதிப்பீட்டிற்கு 38.89 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த Athavan Traders, ஈரோடு நிறுவனத்திடம் விலை குறைப்பு கோரியதில் மேற்கண்ட நிறுவனத்தின் 26.07.2023ம் தேதிய கடிதத்தில் இப்பணியினை மதிப்பீட்டிற்கு 0.50சதவீதம் குறைவான தொகைக்கு மேற்கொள்ள சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த Athavan Traders, ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 2950/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 515, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் உள்ள அசைவ உணவகத்தினை உரிமம் பெற்று நடத்திவந்த (வரிவிதிப்பு எண்.051/103) திரு. ஏ. பெரியசாமி அவர்கள் உடல் நலக்குறை காரணமாக உணவு விடுதி நடத்த இயலாத காரணத்தினால் நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டதால் மேற்படி இனத்திற்கு

அன்னார் செலுத்திய வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க கோரி 29.05.2023ஆம் தேதியன்று விண்ணப்பம் வழங்கியுள்ளார்.

திரு. ஏ.பெரியசாமி என்பவரால் அசைவ உணவக விடுதி உரிமத்திற்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகைகள் கீழ்காணும் விவரப்படி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் நிலுவையாக உள்ளது.

| காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு விவரம் | பக்க எண். | நாள். | தொகை ரூ. |
|---|---|---|---|
| Lapsed Deposit Register Vol-I | 125 | 17.06.1997 | 26,919/– |
| Lapsed Deposit Register Vol-IV | 39 | 12.08.2010 | 24,564/– |
| Lapsed Deposit Register Vol-XVI | 18 | 14.08.2015 | 32,484/– |
| Lapsed Deposit Register Vol-XVI | 34 | 18.08.2016 | 4,35,600/– |
| Lapsed Deposit Register Vol-XV | 16 | 21.06.2019 | 65,340/– |
| **Total** | | | **5,84,907/–** |

மேற்கண்ட வைப்புத்தொகைகள் அனைத்தும் காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் மன்றம் அனுமதி பெற்றே திரும்ப வழங்கப்பட வேண்டும். பொது ஏல நிபந்தனைகளில் வரிசை எண்.75இல் உரிம ஆண்டில் ஏலதாரர் தான் எடுத்துள்ள ஏல இனத்தை நிர்வகிக்க இயலாதபட்சத்தில் நகராட்சிக்கு மூன்று மாதம் அவகாசம் கொடுத்த பின்னரே மேற்படி உரிம இனத்தை நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும் என்று பொது ஏல நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் தான் நடத்தி வந்த அசைவ கடை உரிமத்தினை 14.06.2022ஆம் தேதியன்று தான் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்படுவதாக விண்ணப்பம் வழங்கப்பட்டுள்ளதால், 01.04.2022 முதல் 30.06.2022 வரைக்கான மூன்று மாத வாடகை ரூ.1,25,262/–ஐ (41754x3) மனுதாரரின் வைப்புத்தொகையில் ஈடுசெய்து கொண்டு மீத தொகை ரூ.4,59,645/–ஐ அன்னாருக்கு திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** திரு. A. பெரியசாமி என்பவரால் அசைவ உணவு விடுதி உரிமத்திற்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகை ரூ.5,84,907/–இல் ஏலநிபந்தனையின்படி 01.04.2022 முதல் 30.06.2022 வரைக்கான மூன்று மாத உரிமத் தொகை ரூ.1,25,262/– நகராட்சி கணக்கில் வரவு வைத்துக்கொண்டு மீத தொகை ரூ.4,59,645/– அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.3261/2023/அ2)**

**தீர்மானம் எண் : 516, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி வார்டு எண்.37 சாலையின் எதிரில் இணைப்பு சாலை அமைப்பதற்கு திரு.பார்த்திபன் த/பெ வையாபுரி, நாமக்கல் திருமதி, மலர்க்கொடி க/பெ இளங்கோவன் நாமக்கல் ஆகியோரால் நகராட்சிக்கு பட்டா நிலத்தினை, மேற்படி மனுதாரருக்கு சொந்தமான பெரியப்பட்டி கிராமத்தில் பாகக்காரர் பத்திரம் மூலம் பத்திர எண்.3244/2020 பாத்தியப்பட்ட நிலத்தை பாதை உட்பிரிவு செய்து பெரியப்பட்டி தார் சாலையிலிருந்து மேல்புறமாக பொதுப்பாதைக்காக விடப்பட்ட நிலத்தின் சர்வே எண்.205/4A1B பட்டா எண்5342, கிழமேல் பாதையின் நீளம் 104.00 மீட்டர், அகலம் 7.60மீ கொண்ட பாதைக்கு தார்சாலை அமைத்து நாமக்கல் நகராட்சி வசம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்து நில உரிமையாளர் தானப்பத்திரம் வழங்கி உள்ளார். பெரியப்பட்டி கிராமம் சர்வே எண்.205/4A1Bஇல் நாமக்கல் வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு வருவாய் துறையின் கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் சான்றில் பெரியப்பட்டி கிராமம் சர்வே எண்.205/4A1Bன் விஸ்திரம்.0.07.92, தீர்வை.0.60பைசா கொண்ட நிலமானது திருமதி.மலர்கொடி க/பெ இளங்கோவன், திரு.பார்த்திபன் ஆகிய இருவருக்கும் பாத்தியப்பட்டது என 23.05.2023 தேதிய சான்றில் தெரிவித்துள்ளார். மேலும் நகராட்சி பொறியாளர் அவர்கள் ஆய்வுசெய்து சாலை நல்ல நிலையில் அமைக்கப்பட்டு உள்ளது என குறிப்பு வழங்கியுள்ளார். எனவே பட்டாப்படி தற்போதைய புதிய உட்பிரிவின்படி புதிய பட்டா எண்.5342, சர்வே எண்.2054A1B பு.ஹெக்.0.07.92 திரு.0.60 உள்ள நிலம் புராவும் இதற்கு சக்குபந்தி அளவு விபரம் சர்வே எண்.205/4A1A3ற்கும் கிழக்கு சர்வே எண்.253ல் உள்ள தென்வடல் நாமக்கல் பெரியப்பட்டி செல்லும் தார் சாலைக்கு மேற்கு சர்வே எண்.205/4A1D, 205/4A1E 205/4A1Cக்கு வடக்கு சர்வே எண்.205/4A1A2, 205/4A1A1க்கு தெற்கு. இதன் மத்தியில் கிழமேலடி வடபுரம், 104 மீட்டர் தென்புறம் 104 மீட்டர், தென்வடிலடி கிழபுரம் 7.60 மீட்டர் மேல்புறம் 7.60 மீட்டர் ஆக மொத்தம் 790.40 சதுர மீட்டர் கொண்ட சாலையினை பொது மக்களின் நலன்கருதியும் மேற்படியான பட்டா நில

உரிமையாளர்களால் தானப்பத்திரம் மூலம் இலவசமாக வழங்கப்பட்ட நிலத்தினை நகராட்சி சாலையுடன் இணைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1802/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 517, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**